1973 மார்ச் 20]

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவரவர்களே, இந்த காதி ஸ்திராயலத்திலிருந்து சமீபத்தில் இந்த சாயில்ட் சூட்ஸ் என்று சொல்லி விற்கப்பட்டதே சென்னையில் நடந்த எக்சிபிஷனில், எவ்வளவு விற்கப்பட்டது, அதற்காக மத்திய அரசு ஏதேனும் மானியம் அளித்ததா என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி: அது பற்றிய கேள்வி அல்ல இது. இன்னும் அதனுடைய கணக்கு என்னிடத்தில் வரவில்லை. தனிக் கேள்வி போட்டால் கொடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன்: சார், மதுரை காதி மண்டலப் பகுதியில் மட்டும் ரூ. 30 லட்சம் என்று கூறினர்கள். அதுபோல் மாநிலம் முழுவதற்கும் எடுத்துக்கொண்டால், எவ்வளவு லட்சம் இருக்கும் என்று சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: மதுரையைப்பற்றி மட்டும் கேட்டு இருந்தார்கள். அதுபற்றிய கணக்கு தான் வைத்து இருக்கிறேன். மாநிலம் பூராவிற்கும் எவ்வளவு என்று கேட்டால் வேறு கணக்குத் தருகிறேன்.

மாதவரத்தில் பனைபொருள்கள் சங்கக் கண்காட்சி

445 விஞ.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை-செங்கற்பட்டு மாவட்ட பனைபொருள்கள் கூட்டுறவு சம்மேளனம் 1970-ஆம் ஆண்டில் மாதவரத்தில் கண்காட்சி ஒன்று நடத்தியதா?

(இ) ஆம் எனில், அதற்கு ஆன செலவு என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) இல்லை.

(இ) விஞவுக்கு இடமில்லை.

அசோக்நகர்-அமைந்தகரை இணைப்புச் சாலை

* 414 விஞ.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவுக்கு விடையளிப்பாரா—

சென்னை அசோக் நகரிலிருந்து அமைந்தகரை வரை பெரிய சாலை அமைத்து அதனை பூந்தமல்லி நெடுஞ்சாலையுடன் இணைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அசோக் நகரிலிருந்து ஆற்காடு சாலை வரை சாலை அமைப்பு வேலைகள் முடிவடைந்துவிட்டன. ஆற்காடு சாலையிலிருந்து அமைந்தகரை வரையிலும் அமைந்தகரையிலிருந்து பூந்தமல்லி நெடுஞ்சாலை வரையிலும் சாலை அமைப்பு செய்வதற்குத் தேவையான நிலங்களை நில எடுப்பு சட்டத்தின்கீழ் (Land Acquisition Act) ஆர்ஜிதம் செய்யும் வேலை நடவடிக்கையில் இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, சாதாரணமாக அதற்கு எத்தனை மாதம், எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அதற்குக் காலதாமதம் ஆவதற்குக் காரணம், அங்கே சில கட்டடச் சொந்தக்காரர்கள், நிலச் சொந்தக்காரர்கள், நில ஆர்ஜிதத்தைத் தடுப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு விண்ணப்பங்களை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தனி துணைத் தாசில்தார், தனித் துணை மாவட்ட ஆட்சித் தலைவர், வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆகியோர் அந்த இடத்தைச் சென்று, ஆய்வு செய்து, அந்த வேலைகளை முடிப்பதற்கான முயற்சிகளை வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

இராணிப்பேட்டையில் சுற்றுலா மாளிகை

* 45 வினா.—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டையில் புதிய சுற்றுலா மாளிகை கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, ராணிப்பேட்டை ஆற்காடு நவாப்புகள் ஆண்ட இடம். அங்கே அவர்கள் ஆட்சியைப் பற்றி விளக்குகின்ற பல இடங்கள் இருக்கின்றன. பள்ளிவாசல்கள் இருக்கின்றன. அவைகளை எல்லாம் பயணிகள் வந்து பார்த்துச் செல்வதற்கு வசதி செய்வதற்காக ஒரு சுற்றுலா மாளிகையை கட்ட அரசு முன் வருமா?